| O.S.No. 436/2023 | PW2: திரு. செல்வம் த/பெ. திரு. வரதன் | 06-04-2026 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. நான் வாதியின் துணிக்கடையில் சேல்ஸ்மேனாக 8 வருடங்களாக வேலை செய்கிறேன். ரூ.10,000/- சம்பளம் வாங்குகிறேன். பிரதிவாதி ரேணுகா என்ன வியாபாரம் செய்கிறார் எந்த ஊரை சேர்ந்தவர் என்ற விஷயம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக பிரதிவாதி யார் என்று எனக்கு தெரியாது, நான் பார்த்ததும் இல்லை. இந்த வழக்கு தாக்கல் செய்த விவரம் எப்போது தெரியவந்தது என்றால் வாதி சொல்லி எனக்கு தெரியவந்தது. துரைராஜ்க்கு 2 மனைவிகள் என்றால் அது எனக்கு தெரியாது. வாதி வழக்கு தாக்கல் செய்த விவரம் எனக்கு சுமார் 4 மாதத்திற்கு முன்பு தெரியும். என்னை வாதி சாட்சி சொல்ல அழைத்தார் என்றால் இல்லை. எதன் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் பிரதிவாதி ரூ.4 லட்சம் கடன் வாங்கியதற்கு சாட்சியம் அளிக்க வந்தேன். பிரதிவாதியை நான் பார்த்ததில்லை என்றால் அவர் வீட்டிற்கு வந்து பணம் வாங்கும்போது பார்த்தேன், மற்றபடி நான் பார்த்ததில்லை. எந்த தேதி எந்த மாதம் என்று எனக்கு தெரியாது என்றால் தெரியாது.

2. வா.சா.ஆ.1 பாண்டினை யார் எழுதியது என்று எனக்கு தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது, அங்கிருந்தவர்கள்தான் எழுதினார்கள். நான் கையெழுத்து போட்ட சமயத்தில் பிரதிவாதியும், அதனை எழுதியவரும் இல்லை என்றால் சரியல்ல, இருந்தார்கள். நான் கையெழுத்து போட்ட பேப்பர் என்ன வகையானது என்றால் பச்சை கலரினாலான கையால் எழுதப்பட்ட பாண்டு ஆகும். பாண்டு தட்டச்சு செய்யப்பட்டது என்றால் இல்லை. என்னுடன் யார் கையெழுத்து

போட்டார்கள் என்றால் நான் போட்டுவிட்டு வந்துவிட்டேன், அதன்பிறகு யார் போட்டார்கள் என்று தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.1 பாண்டு Printed Formate என்றால் சரிதான். வாதி J.J. பைனான்ஸை நடத்தி வருகிறார் என்றால் சரியல்ல. அன்றைய தினம் மதியம் 01.00 லிருந்து 02.00 மணிக்குள் வாதியின் வீட்டிற்கு சென்றேன். வாதியும் அவரது கணவரும் சேர்ந்து போலியாக தயாரித்த பாண்டில் கையெழுத்து போட்டுவிட்டு அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் வாதியின் கடையில் பணி செய்வதால் வாதிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** : இல்லை.

ஒம்/- செல்வம்

சாட்சியின் கையொப்பம்

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.06 11:34:51 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**

**செய்யாறு.**